திரு. பி. ஆர். தாமஸ் : பஞ்சாயத்து யூனியன் பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குத்தான் இந்தத் தொல்லை அதிகமாக இருக்கிறதென்பதை அரசுக்கு அறிவித்துக்கொள்கிறேன். எனவே அவர்களைக் கட்டாயப் படுத்தக்கூடாதென்பதற்கு ஒரு சுற்றறிக்கையை அனுப்ப அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : திருப்பித் திருப்பி அதைத்தான் கேட்கிறீர்கள்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கடந்த 9 மாதங்களில் பல்வேறு வகையான ஆசிரியர்களை நான் சந்தித்துக்கொண்டிருக்கிறேன். எந்த ஆசிரியரும் இதுவரை இப்படிப்பட்ட குறைபாட்டைச் சொல்லவில்லை என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Co-education in Boys' High Schools.

* 136 Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether any representation has been received that co-education be continued in Boys' High Schools or girls be admitted in such schools if their parents so desire; and

(b) if so, the action taken thereon?

ஆண்கள் பள்ளிகளில் பெண்களும் ஒன்ருகக் கல்வி பயிலுதல்.

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஆண்கள் உயர்நிலைப் பள்ளிகளில், அவர்களுடன் பெண்களும் ஒன்ருகக் கல்வி பயிலும் முறை தொடர்ந்து செயல்படுத்துவது அல்லது மகளிரின் பெற்ருேர்கள் விரும்பினுல் அந்த பள்ளிகளில் அவர்களை சேர்ப்பது குறித்த முறையீடு ஏதும் வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

1978 பிப்ரவரி 25]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) பின்வரும் மூன்று (ஆண்கள்) உயர்நிலைப் பள்ளிகளிலும் 1977-78-ம் கல்வியாண்டிலிருந்து மாணவிகளைச் சேர்க்க அனுமதிக்கவேண்டும் என்று கோரிக்கைகள் பெறப் பட்டன—

(1) மதுரை தொழிலாளர்கள் நல உரிமைக் கழகம் உயர்நிலைப்பள்ளி, மதுரை.

(2) டி.டி.டீ.ஏ. உயர்நிலைப்பள்ளி, கிறிஸ்டியா நகரம்.

(3) அரசினர் (கழக) உயர்நிலைப்பள்ளி, வள்ளியூர், நெல்லை மாவட்டம்.

(இ) மதுரை தொழிலாளர் நல உரிமைக் கழக உயர்நிலைப் பள்ளிக்கு அருகே பெண்களுக்கென தனியாக பல உயர்நிலைப்பள்ளிகள் அமைந்துள்ள மையாலும் அப் பள்ளிகளில் பெண்களுக்குக் கல்வி போதிக்க தக்க வசதி இருப்பதாலும், மதுரை தொழிலாளர் நல உரிமைக் கழக உயர்நிலைப்பள்ளியில் பயிலும் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு தனிச் சலுகைகள் ஏதும் அளிக்கப் படவில்லை என்பதையும் கருத்திற்கொண்டு, அப் பள்ளியில் மாணவிகள் பயில அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. கிறிஸ்டியா நகரத்திற்கு சுமார் 3 பர்லாங் தூரத்தில் பண்டாரஞ் செட்டி விளை என்னும் ஊரில் பெண்களுக்கான ஒரு தனி உயர்நிலைப்பள்ளி நல்லமுறையில் நடத்தப்பட்டு வருவதாலும், கிறிஸ்டியா நகரத்து மாணவிகள் அனைவரும் அங்கு சேர்க்கப்பட்டு வருவ தாலும், தாலும், அப் பெண்கள் பள்ளியின் தலைமை ஆசிரியை டி.டி.டீ.ஏ. உயர் நிலைப்பள்ளியில் பெண்களை சேர்ப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளதாலும், கிறிஸ்டியா நகரம் டி.டி.டீ.ஏ. உயர்நிலைப்பள்ளியில் பெண்களைச் சேர்க்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

வள்ளியூர் அரசினர் (கழக) உயர்நிலைப்பள்ளியில் மாணவிகளைச் சேர்க்கக் கோரி வந்துள்ள முறையீடு பரிசீலனையிலுள்ளது.

திரு. பி. ஆர். தாமஸ்: இருபாலரும் சேர்ந்து படிக்கிற பள்ளிகளிலே ஏராளமான ஆசிரியர்களும் பணியாற்றுகிறார்கள். அப்படிப்பட்ட பள்ளிகளை இரண்டாகப் பிரிக்கும்போது, பல ஆசிரியர்கள் பணியிழக்கும் சூழ்நிலை ஏற்படுகிறது. அத்தகைய ஆசிரியர்களுக்குப் பணிப் பாதுகாப்பு கொடுப்ப தோடுகூட, பெற்றோர்கள் விரும்பினால் தங்கள் பெண்களை ஆண்கள் பள்ளியில் சேர்க்க அரசு அனுமதியளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஒரே இடத்தில் 2 பள்ளிகள், 3 பள்ளிகள் இருக்கின்ற நேரத்தில், நாம் இது போன்ற மாற்றங்களைச் செய்யும் போது, ஆலோசனை செய்ய வேண்டியிருக்கிறது. ஒரேயொரு சிறிய ஊரில் ஆண்களுக்கென்றும், பெண்களுக்கென்றும் பள்ளிகள் இருந்தால், இரண்டும் நல்ல முறையில் நடக்கின்றன. ஆனால் இரண்டிலும் சேர்ந்து படிக்கலாமென்று சொல்லும்போது, நிச்சயமாக ஒரு பள்ளி பாதிக்கப்பட்டு, அதனால் பல ஆசிரியர்கள் வேலை இழக்கும் நிலை ஏற்படுகிறது. அது போன்ற அனுபவம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இது போன்ற நிலைமையில் கொஞ்சம் ஆலோசனை செய்து, முடிவுகளை எடுத்து வருகிறோம். ஆசிரியர்களைப் பொறுத்த மட்டில், பணிப் பாதுகாப்புக் கொடுக்க இந்த அரசு ஆராயும்.

திரு. க. அறிவழகன்: சில பள்ளிகளிலே இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட பிள்ளைகள் படிக்கிறார்கள். அப்படிப்பட்ட உயர்நிலைப் பள்ளிகளிலே பெண் பிள்ளைகள் படிப்பதற்கான வசதிகளை உருவாக்குவது சிரமமாக இருக்கிறது. தண்டரைப் பட்டாபிராமில் ஓர் உயர்நிலைப்பள்ளி இருக்கிறது. ஆயிரம் பிள்ளைகள் படிப்பதற்கான வசதியுள்ள அந்தப் பள்ளியில் 2,000 பிள்ளைகள் படிக்கிறார்கள். 500, 600 பெண் பிள்ளைகள் அங்கே படிக்கிறார்கள். ஒரு எல்லைக்குமேலே, அதாவது 1,000, 1,500 பிள்ளைகளுக்கு அதிகமாகப் படிக்கின்ற பள்ளிகளை இரண்டாகப் பிரித்து, பெண்களுக்கென்று தனிப் பள்ளிகளை நடத்த அரசு முன்வருமா? அதற்குரிய திட்டம் அரசிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அரசு நிதி ஆதாரங்களைப் பொறுத்து புதிய பள்ளிகளை ஆரம்பிக்கிறது. அப்படி சில இடங்களிலுள்ள பள்ளிகளை இரண்டாகப் பிரிக்கும்போது, இந்த யோசனை நிச்சயமாகக் கருத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.

THIRU D. SANTOSHAM: Mr. Deputy Chairman, Sir, I have heard two opinions being expressed in the matter. One is that during the adolescent age, which is said to be the inquisitive age, it is not desirable for boys and girls to study together. Also, there is the opposite view that that is just the age when they should study together so that they can understand each other better from the point of view of sex. Now, will the Government examine this question from the point of view of an expert committee and take a policy decision on this before proceeding further?

1978 பிப்ரவரி 25]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இது பெரும்பாலும் அந்தப் பகுதியிலே இருக்கிற பெற்றோர்களின் எண்ணத்தையும் கணக்கில் எடுத்துக் கொண்டு செய்யப்படுவதால், இது போன்ற பிரச்சினையில் அரசு குறிப்பிட்டதொரு கொள்கையைப் பின்பற்ற முடியாமல் இருக்கிறது.

Thiru G. SWAMINATHAN: Sir, the Hon. Minister said that the principle of the Government was to have, as far as possible, separate schools for boys and girls. May I know whether the same principle will be followed for the Higher Secondary Schools also?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஆண்களுக்கென்றும், பெண்களுக்கென்றும் தனித் தனியாகப் பள்ளிகள் இருக்க வேண்டுமென்பது அரசின் கொள்கையல்ல. நடைமுறைக்கேற்ப, பெற்றோர்களின் விருப்பத்திற்கு ஏற்ப இப்படிச் செய்கிறோம். ஆண்களும், பெண்களும் ஒன்றாகப் படிக்கின்ற பள்ளிகளை, அவர்கள் ஒன்றாகப் படிக்கக்கூடாதென்ற கருத்தில் பிரிப்பதில்லை. பெண்கள் பள்ளி என்று தனியாக ஏற்படுத்தும்போது, அவர்களுக்கென கல்வித் திட்டங்களையும், பயிற்சிகளையும் தர சௌகரியமாக இருக்குமென்ற காரணத்தால்தான், தனியாக நடத்தப்பட்டு வருகிறது. ஆண்களும் பெண்களும் ஒன்றாகப் படிக்க வேண்டுமென்பதில் கருத்து வேறுபாடில்லை.

(முற்பகல் 11-00)

திரு. எம் சங்கரலிங்கம்: தலைவர் அவர்களே, அண்மையில் சென்னைப் பல்கலைக் கழகம், பெண்கள் கல்லூரியில் ஆண்களையும் சேர்ப்பதென ஒரு முடிவு எடுத்திருப்பதாகச் செய்தித் தாள்களில் வந்திருக்கிறது. அதே போன்று பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் ஆண் மாணவர்களைச் சேர்ப்பதற்கு பெற்றோர்கள் விரும்பினால், அவர்களுக்கு இடம் அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அது பற்றிய கோரிக்கை இது வரையில் அரசுக்கு வரவில்லை. வந்தால் பரிசீலிக்கப்படும்.

Thiru G. SWAMINATHAN: Sir, a majority of the parents, especially in villages, are of the view that their girls should study in separate schools. So, they want separate schools at the Higher Secondary stage also, both at the Taluk level and at the Block level. So, will the Government make arrangements to have separate Higher Secondary Schools for girls, as per the desire of the parents?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துணைத் தலைவரவர்களே, அதைத் தான் முதலிலேயே சொன்னேன். அரசினுடைய நிதியாதாரங்களைப் பொறுத்தும், பெற்றோர்களுடைய கருத்துக்களைப் பெற்றும் முடிவு எடுக்கப்படும்.